**கவனிக்க.**- *30.08.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி III பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1827 - 2013 සැප්තැම්බර් මස 06 වැනි සිකුරාදා - 2013.09.06

*1827 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவு திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1788 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | 1790 |


**கவனிக்க.**- (i) *விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அபிவிருத்தி (திருத்தம்) சட்டமூலம் 2013, யூலை மாதம் 19 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகின்றது.*

(ii) *வல்பொல பியானந்த கல்வி கலாசார மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2013 ஒகத்து 08 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகின்றது.*


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2013, செத்தெம்பர் மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, செத்தெம்பர் மாதம் 13 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## மஹரகம நகர சபை

*நகரசபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 50 ஆம் மற்றும் 52 ஆம் பிரிவுகளின் நியதிகளின்படியிலான அறிவித்தல்*

*நகரசபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 50 ஆம் மற்றும் 52 ஆம் பிரிவுகளின் நியதிகளின்படி மேல் மாகாணத்தில் கொழும்பு மாவட்டத்தில் உள்ள மஹரகம பிரதேச செயலாளர் பிரிவில் மஹரகம நகரசபையின் எல்லைகளில் அமைந்துள்ள பின்வரும் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட வீதிகள் மஹரகம நகர சபைக்கு உரிய வீதிகளாக பிரகடனப்படுத்தப்படல் வேண்டும் என்று பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்படி அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட வீதிகள் மஹரகம நகர சபையினால் உடைமையாக்கப்படுகின்றன என்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*02. பொதுமக்கள் அல்லது உரிய காணி உடைமையாளர்களிடமிருந்து இந்த விடயம் குறித்து ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் அத்தகைய ஆட்சேபனைகள் பொருட்டான காரணங்கள் வர்த்தமானியில் இந்த அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு மாத காலப் பகுதியினுள் எழுத்தில் கொடுக்கப்படல் வேண்டும்.*

*03. ஆட்சேபனைகள் எதுவும் குறிப்பிடப்பட்ட காலப்பகுதியினுள் தெரிவிக்கப்படாவிடில் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட வீதிகள் மஹரகம நகரசபைக்கு சொந்தமானதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு கட்டுப்படுத்தப்படும் என்று இத்தால் பொதுமக்களின் தகவல் பொருட்டு அறிவிக்கப்படுகின்றது.*

*காந்தி கொடிகார,*
*தலைவர்,*
*மஹரகம நகரசபை.*

*நகர சபை அலுவலகம்,*
*மஹரகம,*
*2013.08.02.*

### அட்டவணை

| தெருவின் பெயர் | விபரம் | நீளம் | அகலம் | தொடக்கம் | முடிவு |
|---|---|---|---|---|---|
| பதிரகொட மாயா மாவத்தை வரி மதிப்பீட்டு இலக்கம் : 15/1 முதல் இலக்கம் : 21 வரையுள்ள வழி | திரு. டீ. டபிள்யு. அபேசிங்க நில அளவை யாளரால் 1983.02.17 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 1125 ஆம் இலக்க நில அளவுத் திட்டத்துக்கு அமைய | 156 அடி | நில அளவுத் திட்டத்துக்கு அமைய | 15 | 15/3 |
| பதிரகொட விகாரவத்தை தெரு வரி மதிப்பீட்டு இலக்கம் : 25, 23, இடையிலிருந்து 23/7 வரை கிளை வழி | | 432 அடி | 12 அடி | 23, 25 | 23/7 |
| லியனகொட கிராம சேவை அலுவலர் பிரிவில் பூந்தோட்ட தெரு அருகில் இலக்கம் 1642/2 வீட்டுக்கு அருகில் உள்ள கிளை வழி | திரு. ஆர். ஏ. சிரிசேன நில அளவையாளரால் 2011.02.08 ஆந் திகதி அளந்து தயாரிக்கப் பட்ட 2010 ஆம் இலக்க நில அளவுத் திட்டத்துக்கு அமைய | 246 அடி | 10 அடி | 429 | 427/6 |
| கொட்டாவையில் செவன தெரு வரி மதிப்பீட்ட இலக்கம் : 66/24 க்கு அருகில் உள்ள கிளை வழி | திரு. டீ. டபிள்யு. அபேசிங்க நில அளவையாளரால் 1983.02.15 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 1125 ஆம் இலக்க நில அளவுத் திட்டத்துக்கு அமைய | 470 m | 3.0 m | 66/24 | 66/27 |
| கொட்டாவை குலசெவன தெரு வரி மதிப்பீட்டு இலக்கம் : 66/32 அருகில் உள்ள கிளை வழி | | 465 m | 3.0 m | 66/32 | 66/31 |

**கேகாலை நகர சபை**

*1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க களியாட்ட விடுதிக்கான அனுமதிப்பத்திரம் வழங்கும் சட்டம்*

*இதன்கீழ் அட்டவணையில் காணப்படும் பெயர் குறிப்பிட்டுள்ளவரது பெயருக்கு முன்னால் குறிக்கப்பட்டுள்ள களியாட்ட விடுதியை அந்த இடத்தில் நடாத்திச் செல்வதற்கு 2014 ஆம் வருடத்திற்கான அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பப்படிவம் என்னிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென்பதை 1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க களியாட்ட விடுதிக்கான அனுமதிப்பத்திரம் வழங்கும் சட்டத்தின் 6 ஆம் இலக்க பிரிவின்கீழ் இத்தால் அறிவித்துக்கொள்ளப்படுகிறது.*

*இக்களியாட்ட விடுதிக்கண்மையிலோ, களியாட்ட விடுதிக்கு அனுமதிப்பத்திரம் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ள இடத்துக்கண்மையிலோ வதியும் ஒருவரால் அந்தக் களியாட்ட விடுதிக்காக அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு எதிராக ஆட்சேபனை தெரிவிக்கப்படுமாயின், இவ்வறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து நான்கு (04) வாரங்களுக்குள் தமது ஆட்சேபனைக்கான காரணத்தை எழுத்துமூலம் அறிவிப்பதோடு அதனை இரு பிரதிகளுடன் என்னிடம் சமர்ப்பிக்குமாறு இத்தால் வேண்டிக்கொள்ளப்படுகிறது.*

*ஜீ. கே. சமரசிங்ஹ,*
*தலைவர்,*
*கேகாலை நகர சபை.*

*நகர சபை அலுவலகம்,*
*கேகாலை,*
*2013.08.14.*

**அட்டவணை**

| *விண்ணப்பதாரியின் பெயர், முகவரி* | *களியாட்ட விடுதியின் தவிசாளர்/ செயலாளர்* | *களியாட்ட விடுதியின் பெயர்* | *களியாட்ட விடுதியின் புதிய நடவடிக்கைகளுக்கான அதிகாரமும்/இடமும்* |
|---|---|---|---|
| மைத்தி அதுருபான, இல. 343/7, ரங்வல, கேகாலை. | செயலாளர் | கேகாலை, பெருந்தோட்ட விளையாட்டுக் கழகம் | இல. 39, சுவர்ண ஜயந்தி மாவத்தை, கேகாலை |

*9-45/1*

---

**கேகாலை நகர சபை**

***1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க களியாட்ட விடுதிக்கான அனுமதிப்பத்திரம் வழங்கும் சட்டம்***

*இதன்கீழ் அட்டவணையில் காணப்படும் பெயர் குறிப்பிட்டுள்ளவரது பெயருக்கு முன்னால் குறிக்கப்பட்டுள்ள களியாட்ட விடுதியை அந்த இடத்தில் நடாத்திச் செல்வதற்கு 2014 ஆம் வருடத்திற்கான அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பப்படிவம் என்னிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென்பதை 1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க களியாட்ட விடுதிக்கான அனுமதிப்பத்திரம் வழங்கும் சட்டத்தின் 6 ஆம் இலக்க பிரதிக்னையின்கீழ் இத்தால் அறிவித்துக்கொள்ளப்படுகிறது.*

*இக்களியாட்ட விடுதிக்கண்மையிலோ, களியாட்ட விடுதிக்கு அனுமதிப்பத்திரம் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ள இடத்துக்கண்மையிலோ வதியும் ஒருவரால் அந்தக் களியாட்ட விடுதிக்காக அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு எதிராக ஆட்சேபனை தெரிவிக்கப்படுமாயின், இவ்வறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து நான்கு (04) வாரங்களுக்குள் தமது ஆட்சேபனைக்கான காரணத்தை எழுத்துமூலம் அறிவிப்பதோடு அதனை இரு பிரதிகளுடன் என்னிடம் சமர்ப்பிக்குமாறு இத்தால் வேண்டிக்கொள்ளப்படுகிறது.*

*ஜீ. கே. சமரசிங்ஹ,*
*தலைவர்,*
*கேகாலை நகர சபை.*

*நகர சபை அலுவலகம்,*
*கேகாலை,*
*2013.08.14.*

**அட்டவணை**

| விண்ணப்பதாரியின் பெயர், முகவரி | களியாட்ட விடுதியின் தவிசாளர்/ செயலாளர் | களியாட்ட விடுதியின் பெயர் | களியாட்ட விடுதியின் புதிய நடவடிக்கைகளுக்கான அதிகாரமும்/இடமும் |
|---|---|---|---|
| விதான ஹேனயலாகே சிரில், இல. 167/28, ஓலகம, கேகாலை | தவிசாளர் | புளுலைட் ட்ரேடர்ஸ் அன்ட் ரெஸ்ரூடுரன்ட் | இல. 152, கலுகல்ல மாவத்தை, கேகாலை |

9-45/2

---

# நானாவித அறிவித்தல்கள்

## ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபை

### திண்மக் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம்

ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபையினால், 252 ஆம் அத்தியாயத்தின் IV ஆம் பிரிவின் மூலம் கிடைக்கப்பட்டுள்ள அதிகாரத்தை அமுல்படுத்துவதற்காக தரப்படுத்தப் பெற்ற துணைவிதிச் சட்டத்தின் X ஆம் பிரிவின் 19 ஆம் மற்றும் 20 ஆம் பந்திகளின் மற்றும் XI ஆம் பிரிவின் ஒழுங்கு விதிமுறைகளின் பிரகாரம் 2013.07.23 ஆந் திகதி நிதிக் குழுவின் இலக்கம் 73:19 மற்றும் 2013.07.29 ஆந் திகதிய பொதுச் சபையின் இலக்கம் 06:01 ஆம் தீர்மானத்தின்படியும் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபை அதிகார எல்லையினுள் திண்மக் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்காக வியாபாரத் தளங்களிலிருந்து 2013, யூன் மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் கட்டணங்களை அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதென பொது மக்களுக்கு இத்தால் அறியத்தரப்படுகின்றன.

அதன் பிரகாரம் மாநகர சபை அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள சகல வர்த்தக/கைத்தொழில்சாலைகள்/ஹோட்டல் உணவகங்கள் மற்றும் "நர்சிம் ஹோம்" ஆகியவற்றுக்காக கீழ்க்காணும் வகையில் கட்டணங்கள் அறவிடப்படுகிறது.

உபயோகக் கட்டணம் 1

| இடம் | மாதாந்தக் கட்டணம் ரூபா |
|---|---|
| வர்த்தக- | |
| சதுர அடி 200 இற்கு குறைந்த | 200 0 |
| சதுர அடி 200-1,000 வரை | 750 0 |
| சதுர அடி 1,000-3,000 வரை | 1,000 0 |
| சதுர அடி 3,000 இற்கு மேல் | 1,500 0 |
| கைத்தொழிற்சாலை- | |
| சதுர அடி 200 இற்கு குறைந்த | 200 0 |
| சதுர அடி 200-1,000 வரை | 750 0 |
| சதுர அடி 1,000-3,000 வரை | 1,000 0 |
| சதுர அடி 3,000 இற்கு மேல் | 2,000 0 |
| ஹோட்டல் உணவகங்கள், "நர்சிம் ஹோம்"- | |
| சதுர அடி 200 இற்கு குறைந்த | 200 0 |
| சதுர அடி 200-1,000 வரை | 750 0 |
| சதுர அடி 1,000-3,000 வரை | 2,000 0 |
| சதுர அடி 3,000 இற்கு மேல் | 5,000 0 |
| மதத் தலங்கள், அரசாங்க வைத்தியசாலைகள் மற்றும் அரசாங்க நிறுவனங்கள் (இலாபம் பெறுவதை இலக்காகக் கொள்ளாத) | கட்டணங்கள் அறவிடப்பட மாட்டாது. |

*உபயோகக் கட்டணம் (மொத்தக் கழிவுப்பொருட்கள்)*

மொத்தமாக கழிவுப் பொருட்களை அகற்றுவதற்காக வியாபாரத் தளங்களிலிருந்து செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள் கீழே தரப்பட்டுள்ளன:-

| கழிவுப் பொருட்களின் அளவு | ஒரே தடவையில் செலுத்தப்படவேண்டிய கட்டணம் (ரூபா) |
|---|---|
| (அ) தள்ளுவண்டிலுக்கு குறைந்தளவு (கியுபிக் மீற்றர் 0.25) | கட்டணம் அறவிடப்பட மாட்டாது. |
| (ஆ) டிரக்டர் 1/2 அளவுக்காக | 500 0 |
| (இ) நிரம்பிய டிரக்டர் அளவு | 1,000 0 |
| (ஈ) டிரக்டர் அளவைவிட கூடும்போது | "ஆ" மற்றும் "இ" இன் பெருக்கலின் பெறுமதி |

* கட்டணங்கள் செலுத்தாத வியாபாரத் தளங்களிலிருந்து குப்பைகள் அகற்றப்பட மாட்டாது.

* கட்டணங்களுக்குரிய மேற்குறித்த கட்டளைகள் சம்பந்தமான ஒவ்வொரு மீறல்கள் தொடர்பாகவும் தண்டப்பணம் செலுத்தப்படுதல் வேண்டும்.

* மாதம்தோறும் கட்டணம் செலுத்தப்பட வேண்டும் என்பதுடன் ஒவ்வொரு மாதத்திற்காகவும் அதற்கு முந்திய மாதத்தின் 25-30 ஆம் திகதிக்குள் கட்டணம் செலுத்தப்பட வேண்டும் என்பதுடன் செலுத்துதலுக்காக மாநகர சபையினால் பற்றுச்சீட்டு வழங்கப்படும்.

* வருடத்திற்கான மொத்தக் கட்டணத்தையும் ஒரே தடவையிலும் செலுத்த முடியும்.

* ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபையின் பெயரில் எழுதப்பட்ட காசோலையினாலும் கட்டணங்களைச் செலுத்த முடியும்.

ஆர். ஏ. டி. ஜனக்க ரணவக்க,
மாநகர முதல்வர்,
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபை.

9-83

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**

**2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**

**“இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை”**

**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**எல்லா வர்த்தமானிகளையும் www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், “பொரல்லை” என்பதே மணி ஓடர்களுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் ‘சுப்றீம் கோட்’ புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் “அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8” அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.*** *- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

***அட்டவணை - 2013***

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **செத்தெம்பர்** | .. | வெள்ளி | 06.09.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.08.2013 |
| | | வெள்ளி | 13.09.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.08.2013 |
| | | வெள்ளி | 20.09.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.09.2013 |
| | | வெள்ளி | 27.09.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.09.2013 |
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | 04.10.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.09.2013 |
| | | வெள்ளி | 11.10.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.09.2013 |
| | | வியாழன் | 17.10.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.10.2013 |
| | | வெள்ளி | 25.10.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.10.2013 |
| **நவெம்பர்** | .. | வெள்ளி | 01.11.2013 | .. | நண்பகல் 12 | வியாழன் | 17.10.2013 |
| | | வெள்ளி | 08.11.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.10.2013 |
| | | வெள்ளி | 15.11.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.11.2013 |
| | | வெள்ளி | 22.11.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.11.2013 |
| | | வெள்ளி | 29.11.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.11.2013 |

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.